

மனைப்பிரிவு

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

தென்காசி மாவட்டம்,
தென்காசி நகராட்சி,
தென்காசி கிராமம்,
தென்காசி விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.6

வார்டு. ஏ, பிளாக். 02, நகரளவை எண்:76 (பழைய சர்வே எண்.82/1)-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு-1:800 இணையதள விண்ணப்பம் எண்: DJTN78H5

குறிப்பு:

மனைப்பிரிவு இடத்தின் பரப்பு	-	6050.00 ச.மீ (1.49 ஏக்கர்)
உத்தேச சாலையின் பரப்பு	-	1653.45 ச.மீ
E1E1 திட்டச்சாலையின் பரப்பு	-	247.00 ச.மீ
மீதமுள்ள பரப்பு	-	4149.55 ச.மீ
கோரிய மனைகள்	-	25
ஒதுக்கிய மனைகள்	-	25

மனைப்பிரிவின் இடத்தின் எல்கை

நிலையில் உள்ள சாலை

உத்தேச மனைப்பிரிவு சாலை

E1E1 மற்றும் E3E3 திட்டச்சாலை

ஒதுக்கீடுகள்:

பொது ஒதுக்கீடுகள்:

1. ஆணையாளர் தென்காசி நகராட்சிக்கு தான பத்திர ஆவண எண்.204/2024
நாள்: 19.01.2024 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டவை

i) பூங்கா (OSR) - 419.30 ச.மீ (10.10%)

2. ஆணையாளர் தென்காசி நகராட்சிக்கு தான பத்திர ஆவண எண்: 3721/2023
நாள்: 07.09.2023 -ன் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டவை.

i). உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்குகளின் பரப்பு - 1653.45 ச.மீ

ii). E1E1 திட்டச்சாலையின் பரப்பு - 247.00 ச.மீ

iii). பொது உபயோகம் (Public Purpose) (A) - 24.15 ச.மீ (0.58%)

iv). பொது உபயோகம் (TANGEDCO) (B) - 23.13 ச.மீ (0.56%)

v). திறவிடம் - 461.36 ச.மீ

கட்டிட வரம்பு : 7.20 மீ மற்றும் 9.00 மீ அகல சாலைக்கு 1.50 மீ
: 10.00 மீ அகல சாலைக்கு 3.00 மீ

மூலை முடக்கு : 7.20 மீ 9.00 மீ மற்றும் 10.00 மீ அகல சாலைக்கு 1.50 மீ x 1.50 மீ

நிபந்தனைகள்:

1. அரசாணை நிலை எண் : 134-ன் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 20.9.2002 நில உரிமம் குறித்து நகராட்சி ஆணையாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் சாலைகள், மூலை முடக்கு, பூங்கா மற்றும் இதர பொது ஒதுக்கீடுகள் ஆகியவற்றின் நிலப்பரப்பினை தென்காசி நகராட்சிக்கு தானபத்திரம் மூலம் மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

2.இம்மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கும் முன் நில ஆர்ஜிதம் ஏதும் இல்லை எனவும், எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் மற்றும் நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி தென்காசி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை எனவும் ஆணையாளர், தென்காசி நகராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3.நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

4.அரசாணை எண்:181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 09.12.2020-ன் படி ஆணையாளர், தென்காசி நகராட்சி அவர்கள் தொடர் நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட வேண்டும்.

5. மனைப்பிரிவினை ஒட்டி மேற்கில் அமைந்துள்ள ஓடையில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்தல் கூடாது. மேலும் மனைப்பிரிவில் இருந்து கழிவு நீர் ஏதும் கலக்காமல் இருத்தல் வேண்டும் மேலும் ஓடையினை ஒட்டி மனுதாரர் இடத்தில் R.C.C. Retaining wall (தடுப்பு சுவர்) கட்டப்படல் வேண்டும்.

6.வனத்துறை, கனிமம் (ம) சுரங்கத்துறை, வேளாண்மை பொறியியல் துறை மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் தடையின்மைச் சான்றுகள் மற்றும் ஆணையர் தென்காசி நகராட்சி அவர்களின் கடிதத்தின் அடிப்படையில் இம்மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேலும், மேற்படி தடையின்மைச் சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் மனுதாரரால் நிறைவேற்றப்படல் வேண்டும்.

ம.வ/ தெமாநஊஅ எண் : SWP/07/2024

வ

இணை இயக்குநர் / உதவி இயக்குநர்(முகூபொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தென்காசி மாவட்டம்

அளவர்/உதவி வரைவாளர் வரைவாளர் நிலை -III மேற்பார்வையாளர்/வ.நி-II

Signature Not Verified
Signed by Sankaranarayanan Elizabeth Tamilarasi
Date: 2024.02.19 16:41:00